# புனித கிளாவர் இராயப்பர் (1581 – 1654)

இவர் பல்கலைக் கழகத்தில் பயிற்சி பெற்றுத் தேர்ந்த பின் இயேசு சபையில் சேர்ந்தார். அங்கு புனித அல்போன்ஸ் ரோட்ரிக்ஸ் என்னும் துணைச் சகோதரர் இவருக்கு ஆன்ம வழி காட்டியானார். அவரது ஆலோசனையின் மேல் தென் அமெரிக்காவில் உழைக்கத் தம்மைக் கையளித்தார். முதலில் கார்த்தஜேனா நகருக்குச் சென்றார். மேற்கிந்திய தீவுகளுக்காக அடிமைகள் அங்கு விற்கப்பட்டு வந்தார்கள். 40 ஆண்டுகளாக அடிமைகளுக்காக இவர் உழைத்தார். அடிமைகளின் தந்தையாகவும், மருத்துவராகவும் ஆசிரியராகவும், நண்பராகவும் பணி புரிந்தார். அடிமைகளின் அடிமை என்னும் பட்டம் பெற்றார். இவரது ஆச்சரியத்திற்குரிய பொறுமையையும், நீக்ரோக்களின் மீது இவர் கொண்ட அன்பையும் அகில உலகும் பாராட்டியது. பசியாய் இருந்தவர்களுக்கும், உடையின்றி இருந்தவர்களுக்கும் இவர் தம் உணவையும் உடையையும் கொடுப்பார். துன்புறுத்தப்பட்ட நீக்ரோ அடிமைகளுக்கு சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட நல்ல சமாரித்தன் ஆனார். எசெக்கியேல் இறைவாக்கினர் கூறும் நல்ல ஆயனின் குறிகள் அனைத்தும் இவரிடம் இருந்தன. இளகிய மனது கொண்ட யோபு மகாத்மாவுக்கும் இவரை ஒப்பிடலாம். இவருக்கு ஏராளமான தொல்லைகள் வந்தது. இயேசு சபைக் குருக்கள் முதலாய் இவருக்கு தொல்லை கொடுத்தார்கள். இவரோ எதையும் பொருட்படுத்தவில்லை. 3 லட்சம் பேர்களுக்கு மேல் இவரது கையால் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். ஞானஸ்நானம் பெற்றவர்களை அப்படியே விட்டுவிடவில்லை. அடிமைக் கப்பல் வராத நாட்களில் உள்நாட்டுகப் போய் தாம் மனந்திரும்பிய மக்களுக்கு மறையுரைகள் நிகழ்த்துவார். திருமணங்களை சரிப்படுத்தி குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து இயேசுக் கிறிஸ்துவே, இறைவனின் திருமகனே, நீரே என் தந்தை, நீரே என் தாய், எனக்கு எல்லாம் நீவீர், என்று இவர் அடிக்கடி கூறுவார்.

**சிந்தனை:**

இன்றும் எத்தனையோ ஆயிரம் மக்கள் பாவத்துக்கும் சாத்தானுக்கும் அடிமைகளாக இருக்கின்றார்கள். இவர்களை மீட்பது நம் கையில் இருக்கிறது. இவர்களுக்காக நாம் ஏதாவது செய்கிறோமா?

**செபம்:**

ஆண்டவரே, பாவம் என்னும் அடிமைத்தனத்தில் இருந்து மக்கள் அனைவரையும் விடுவிப்பார்.